# சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை

**கொள்கை விளக்கக் குறிப்பு 2017-2018**

**மானியக் கோரிக்கை எண்.15**

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

# தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்

## 1. முன்னுரை

தமிழ்நாடு நீர் மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு வாரியம், தமிழக அரசால், பிரிவு–4, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974–ன் படி (1974–ஆம் ஆண்டு மத்திய அரசு சட்டம் 6–ன்படி) 1982 பிப்ரவரி 27–ஆம் நாள் (27–2–1982) அமைக்கப்பட்டது. பின்னர் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் (த.நா.மா.க.வா) என 1983–ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இவ்வாரியம் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977, காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986 மற்றும் இச்சட்டங்களின் கீழ் அறிவிக்கை செய்யப்பட்ட விதிகளைச் செயல்படுத்துகின்றது. அதன்படி தற்போது வாரியம் கீழ்க்கண்ட சட்டங்கள் மற்றும் விதிகளை செயல்படுத்தி வருகின்றது.

- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974
- தமிழ்நாடு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983

- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம், 1977
- நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி விதிகள், 1978
- காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981
- தமிழ்நாடு காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) விதிகள், 1983
- சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம், 1986
- சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) விதிகள், 1986
- தீங்கு விளைவிக்கும் இரசாயனங்கள் உற்பத்தி, சேமிப்பு மற்றும் இறக்குமதி விதிகள், 1989
- பறக்கும் சாம்பல் பயன்படுத்துதல் அறிவிக்கை, 1999
- மின்கலன்கள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள், 2001
- சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை, 2006
- தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016
- மருத்துவக் கழிவு மேலாண்மை விதிகள், 2016
- திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2016
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016

- மின்னணு கழிவு மேலாண்மை விதிகள், 2016
- கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள், 2016

## 2. பணிகள்

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 பிரிவு 17 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 பிரிவு 17– ன்கீழ் வரையறுக்கப்பட்டபடி தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் முக்கியப் பணிகள் பின்வருமாறு :-

- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் பற்றிய விரிவான திட்டம் தீட்டுதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் குறித்து மாநில அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.
- நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்புடைய தகவல்களை சேகரித்தல் மற்றும் வெளியிடுதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களின் செயல்திறனை ஆய்வு

செய்தல் மற்றும் திட்டங்கள், தரநிர்ணயங்களை சரி செய்வதற்காக அவற்றை பரிசீலனை செய்தல்.

- காற்று மாசுபடுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல் மற்றும் குறைத்தல் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ள, தொழிற்சாலைகளின் உற்பத்தி முறையில் மாசினை குறைக்கும் உபகரணங்களை ஆய்வு செய்து தொழிற்சாலைகளுக்கு வழிகாட்டுதல்.
- காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில், காற்றின் தன்மையை அளவீடு செய்ய ஆய்வு செய்தல் மற்றும் காற்று மாசுபடுவதைக் கட்டுப்படுத்துதல், தடுத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக் கழிவுநீர், தொழிற்சாலைகள், வாகனங்கள் மற்றும் பிற ஆதாரங்களிலிருந்து காற்று மண்டலத்தில் வெளியேற்றப்படும் வாயுக்கழிவுகள் ஆகியவற்றிற்கு வரையறைகளை விதித்தல், மாற்றியமைத்தல் அல்லது நீக்குதல்.
- வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக் கழிவுநீரை சிறந்த முறையில், பொருளாதார ரீதியாக உகந்த வழியில் சுத்திகரிப்பு செய்வதற்கான தொழில்நுட்பத்தை உருவாக்குதல்.

- வடிகால் கழிவுநீர், செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளின் மாதிரிகளைச் சேகரித்து குறிப்பிட்ட காரணிகளை தர அளவீட்டிற்காக பகுப்பாய்வு செய்தல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, நீர் மற்றும் காற்று மாசுபடுவதைத் தடுக்க, கட்டுப்படுத்த மற்றும் குறைப்பது சம்பந்தமான திட்டங்களில் ஈடுபட்டுள்ள மற்றும் ஈடுபடுத்தப்படும் நபர்களுக்கு பயிற்சி அளித்தல் மற்றும் விழிப்புணர்வு கல்வி நிகழ்ச்சிகளை நடத்துதல்.
- மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மாநில அரசு குறிப்பிடும் பிற பணிகளையும் நிறைவேற்றுதல்.

## 3. **நிறுவன அமைப்பு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மூன்று நிலை அமைப்பாக மாநில அளவில் சென்னையில் தலைமை அலுவலகத்தையும், மண்டல அளவில் மண்டல அலுவலகங்களையும், மாவட்ட அளவில் மாவட்ட அலுவலகங்களையும் கொண்டு மொத்தம் **656** (மே **2017** நிலவரப்படி) பணியாளர்களுடன் இயங்கி வருகின்றது. அதன்படி இணை தலைமை சுற்றுச் சூழல் பொறியாளர் தலைமையில்

6 மண்டல அலுவலகங்களும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் 36 மாவட்ட அலுவலகங்களும் மற்றும் சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் ஈரோடு மற்றும் திருப்பூரில் 2 பறக்கும் படைகளும் உள்ளன. தொழிற்சாலைகளை கண்காணிப்பதில் வாரியத்திற்கு உதவும் வகையில் 5 மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், 10 மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள் ஆகியவை வாரியத்தால் ஏற்படுத்தப்பட்டு இயங்கி வருகின்றன. இவ்வாய்வகங்கள், நீர், வடிகால் கழிவு நீர், தொழிற்சாலை கழிவுநீர், புகைபோக்கி வழியே வெளியேற்றப்படும் புகை, சுற்றுப்புற காற்று மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவு மாதிரிகளை ஆய்வு செய்கின்றன. சென்னை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய இடங்களில் உள்ள மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்கள், தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து தேசியதரச் சான்றிதழ் (OSHAS 18001) பெற்றுள்ளன.

## 4. இசைவாணை மேலாண்மை

நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 தொழிற்சாலைகள், பிரிவு 25–ன் படி, வடிகால் கழிவுநீர் மற்றும் செயல்முறைக்கழிவு நீரினை நீரோடை அல்லது கிணறு அல்லது வடிகால் அல்லது நிலத்தில் வெளியேற்றுவதற்காக மாநில மாசு

கட்டுப்பாடு வாரியத்திடம் இசைவாணை பெற வேண்டும். மேலும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 பிரிவு 21–ன்படி, காற்று மாசு கட்டுப்பாடு பகுதியில் இயக்குவதற்கான இசைவாணையையும் வாரியத்திடம் பெற வேண்டும். தமிழ்நாடு அரசு, 28.09.1983 நாளிட்ட சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அரசாணை எண் 4–ல் தமிழ்நாடு முழுவதையும் காற்று மாசு கட்டுப்பாடு பகுதியாக அறிவித்துள்ளது.

தொழிற்சாலைகளின் வகைப்பாடினை ஒருமுகப்படுத்தும் பொருட்டு, மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளின் மாசு அளவினை கணக்கிட்டு அவற்றினை சிகப்பு, ஆரஞ்சு, பச்சை மற்றும் வெள்ளை என வகைப்படுத்தியுள்ளது. இதனை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அமல்படுத்தி வருகின்றது. மேலும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிப்பதற்காக அவற்றின் மொத்த முதலீட்டு அளவினைக் கொண்டு பெரிய, நடுத்தர மற்றும் சிறு தொழிற்சாலைகள் என வகைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழிற்சாலையின் மொத்த நிலையான சொத்து மதிப்பு ரூ. 5 கோடிக்கு கீழ் இருப்பின் அவை சிறுவகை தொழிற்சாலை

எனவும், ரூ 5–10 கோடிக்கு இடையிலிருப்பின் நடுத்தர வகை தொழிற்சாலை எனவும், ரூ 10 கோடிக்கு மேல் இருப்பின் பெரிய வகை தொழிற்சாலை எனவும் வகைப்படுத்தப்பட்டுள்ளன. தற்போது சுமார் 45,508 தொழிற்சாலைகள் வாரிய வரைமுறையின் கீழ் உள்ளன.

தொழிற்சாலைகளுக்கு இசைவாணை இரண்டு கட்டமாக வழங்கப்படுகிறது. முதல் கட்டமாக, தொழிற்சாலை நிறுவதற்கான இசைவாணை, நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 கீழ், அது அமையவிருக்கும் இடத்தின் சுற்றுச்சூழல் தாக்கம், மாசு தடுப்பு முறைகள் ஆகியவற்றினை கருத்தில் கொண்டு சில நிபந்தனைகளின் அடிப்படையில் வழங்கப்படுகிறது. இரண்டாவது கட்டமாக, தொழிற்சாலை அமைப்பதற்கான இசைவாணையில் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்த பிறகு, தொழிற்சாலை உற்பத்தியை தொடங்குவதற்கு மற்றும் இயங்குவதற்கான இசைவாணை வழங்கப்படுகிறது. தொழிற்சாலைக்கு இசைவாணை வழங்குவதை விரைவுபடுத்தும் வகையில் இசைவாணை வழங்கும் அதிகாரம் மண்டல மற்றும் மாவட்ட அலுவலர்களுக்கு, தொழிற்சாலையின் அளவு மற்றும் வகையின்

அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. வாரியத்தின் கள பொறியாளர்கள், தங்களின் பகுதிக்குட்பட்ட ஒவ்வொரு தொழிற்சாலையையும் குறித்த கால இடைவெளிகளில் ஆய்வு செய்து, செயல்முறைக் கழிவுநீர் மற்றும் வாயுக்கழிவுகளைச் சுத்திகரிக்க அமைக்கப்பட்டுள்ள மாசு கட்டுப்பாடு சாதனங்களின் செயல்திறனைத் தொடர்ந்து கண்காணிக்கின்றனர். மேலும், பொது மக்கள் மற்றும் பிற நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் மாசு பற்றிய புகார்களையும் ஆய்வு செய்கின்றனர். ஏப்ரல் **1, 2016** முதல் ஏப்ரல் **30, 2017** வரை வாரியம், **951** தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையையும், 3012 தொழிற்சாலைகளுக்கு இயங்குவதற்கான இசைவாணைகளையும் வழங்கியுள்ளது.

## 4.1 இசைவாணை செல்லுபடியாகும் கால அளவை திருத்தியமைத்தல்

மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் / மாநில சுற்றுசூழல் தாக்க மதிப்பீட்டு குழுமம் மூலம் தொழிற்சாலைகளுக்கு வழங்கப்படும் சுற்றுச்சூழல் அனுமதி செல்லுபடியாகும் காலஅளவுடன், வாரியம் வழங்கும் இசைவாணையின் கால அளவும் பொருந்தும் வகையில், வாரியம் **02.08.2016** நாளிட்ட நடப்பாணை எண் **5–**ல் நீர் (மாசு தடுப்பு

மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981–கீழ் வழங்கும் இசைவாணையின் கால அளவினை திருத்தி அமைத்துள்ளது. அதன் விபரம் பின்வருமாறு:–

**நிறுவுவதற்கான இசைவாணை**

| திட்டங்கள் | இசைவாணை செல்லுபடியாகும் கால அளவு |
|---|---|
| சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ்வரும் திட்டங்கள் | **7 ஆண்டுகள் (1 கட்டணம்)** |
| சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு அறிவிக்கையின் கீழ் வராத அனைத்து திட்டங்கள் | **5 ஆண்டுகள் (1 கட்டணம்)** |

**இயக்குவதற்கான இசைவாணை**

| சிகப்பு வகை தொழிற்சாலைகள் | ஆரஞ்சு வகை தொழிற்சாலைகள் | பச்சை வகை தொழிற்சாலைகள் |
|---|---|---|
| **5 ஆண்டுகள் (5 கட்டணங்கள்)** | **10 ஆண்டுகள் (5 கட்டணங்கள்)** | **14 ஆண்டுகள் (7 கட்டணங்கள்)** |

## 5. இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை

இசைவாணை மேலாண்மையின் செயல்திறனை மேம்படுத்தும் வகையிலும், வெளிப்படைத் தன்மையை கொண்டுவரும் நோக்கத்திலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், இசைவாணை மேலாண்மையில் மின் ஆளுமையை நடைமுறைப்படுத்தியுள்ளது. அதன்படி தொழில் முனைவோர், வாரிய இசைவாணை வேண்டும் விண்ணப்பங்களை சுலபமாக இணையதளத்தின் மூலம் சமர்ப்பிக்கும் பொருட்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமையை ஏற்படுத்தியுள்ளது. இவ்வசதியினைப் பயன்படுத்தி தொழில் முனைவோர் தொழிற்சாலை நிறுவுவதற்கான இசைவாணை, இயக்குவதற்கான இசைவாணை மற்றும் இசைவாணை புதுப்பித்தல் ஆகியவற்றிற்கான விண்ணப்பங்களை இணைய வழி மூலம் சமர்ப்பிக்கலாம். மேலும், சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களின் நிலையையும் அறிந்து கொள்ளலாம்.

மேலும் விண்ணப்பம் மறு ஆய்வு, விளக்கங்கள் கேட்டல், ஆய்வு மேற்கொள்ளல், ஆய்வறிக்கை சமர்ப்பித்தல், இசைவாணை தயாரித்தல் ஆகிய இசைவாணை மேலாண்மை

செயல்முறைகளை இணையதளம் மூலமாகவே மேற்கொள்ளவும் மற்றும் வாரியத்தின் செயல்பாடுகளை வாரிய அதிகாரிகள் இணையதளம் வழியாகவே மேற்பார்வையிடவும் இந்த அமைப்பு வழி வகுக்கிறது. **20.01.2015** முதல், தொழிற்சாலைகளின் விண்ணப்பங்கள், இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை மூலம் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படுகின்றன. இதற்காக தொழிற்சாலைகளுக்கு உதவும் வண்ணம் வாரியம் தனது **36** மாவட்ட அலுவலகங்களிலும் உதவி மையத்தினை ஏற்படுத்தியுள்ளது. இசைவாணை வேண்டி விண்ணப்பம் செய்வதற்கான இணைய தள முகவரி: tnocmms.nic.in. 20.01.2015 முதல் **31.05.2017** வரை இணைய வழி மூலம் **2855** தொழிற்சாலைகளுக்கு நிறுவுவதற்கான இசைவாணையும், **11781** தொழிற்சாலைகளுக்கு இயக்குவதற்கான இசைவாணையும் மற்றும் **20508** தொழிற்சாலைகளுக்கு இசைவாணை புதுப்பித்தும் தரப்பட்டுள்ளன.

## 6. இணையதளம் மூலம் புகார்களுக்கு தீர்வு காணும் முறை

பொது மக்கள், தொழிற்சாலை மாசு சம்மந்தமான புகார்களை எளிதில் தெரிவித்து அதன் மீது உரிய நடவடிக்கையை விரைவில் எடுக்கும் நோக்கத்துடன்

இணையதளம் மூலமாக புகார் தீர்வு காணும் முறையை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் **1.3.2016** முதல் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்மூலம் தொழிற்சாலை மாசு குறித்தான புகார்களை பொதுமக்கள் இணையதளம் மூலம் வாரியத்திடம் பதிவு செய்யலாம். அதன் மீது விசாரணை செய்து, எடுக்கப்பட்ட நடவடிக்கை பற்றிய விபரம் மனுதாரருக்கு தெரிவிக்கப்படுகின்றது. தபால் மூலம் பெறப்படும் புகார்களும் இந்த இணையதளத்தில் பதிவு செய்யப்படும். **01.03.2016**–லிருந்து **31.05.2017** வரை **3450** புகார்கள் இணையதளம் மற்றும் தபால் மூலம் பெறப்பட்டு, நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

## 6.1 முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் அம்மா அழைப்பு மைய புகார்கள்

முதலமைச்சரின் தனிப்பிரிவு மற்றும் அம்மா அழைப்பு மைய புகார்களின் மீது துரிதமாக நடவடிக்கை எடுப்பதற்காக வாரியத்தில் அதற்கென தனியாக ஒரு பிரிவு செயல்பட்டு வருகின்றது. முதலமைச்சரின் தனிப்பிரிவு மூலம் பெறப்படும் புகார்கள் **15** நாட்களுக்குள்ளாகவும், அம்மா அழைப்பு மையம் மூலம் பெறப்படும் புகார்கள் ஒரு வார காலத்திற்குள்ளாகவும் விசாரணை செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறது.

**01.04.2016** முதல் **31.05.2017** வரை **428** முதலமைச்சரின் தனிப்பிரிவு புகார்களும் **1138** அம்மா அழைப்பு மைய புகார்களும், பெறப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளன.

**7. தொழிற்சாலைகள் கண்காணிப்பு**

வாரியம், **25.02.2004** நாளிட்ட நடப்பாணை எண் **22**–ல் தொழிற்சாலைகளை சீரிய முறையில் கண்காணிக்கும் நோக்கத்துடன் தொழிற்சாலைகளின் அளவு மற்றும் வகையின் அடிப்படையில் அவற்றினை ஆய்வு செய்தல் மற்றும் மாதிரிகள் சேகரிப்பு செய்வதற்கான கால அளவினை நிர்ணயம் செய்துள்ளது.

| பிரிவு | தொழிற் சாலையின் வகை | **ஆய்வுக்கான காலவரையறை** | **கழிவுநீர் மாதிரிகள் சேகரிப்பு காலவரையறை** |
|---|---|---|---|
| **பெரிய முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள்** | **சிவப்பு** | **மூன்று மாதத்திற்கு ஒரு முறை** | **மாதம் ஒரு முறை** |
| | **ஆரஞ்சு** | **ஆறு மாதத்திற்கு ஒரு முறை** | **நான்கு மாதத்திற்கு ஒருமுறை** |
| | **பச்சை** | **இரண்டு வருடத்திற்கு ஒரு முறை** | **––** |

| | | | |
|---|---|---|---|
| நடுத்தர முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் | சிவப்பு | நான்கு மாதத்திற்கு ஒரு முறை | மூன்று மாதத்திற்கு ஒரு முறை |
| | ஆரஞ்சு | ஆறு மாதத்திற்கு ஒரு முறை | ஆறு மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | — |
| சிறு முதலீட்டில் இயங்கும் தொழிற்சாலைகள் | சிவப்பு | வருடத்திற்கு ஒரு முறை | மூன்று முதல் ஆறு மாதத்திற்கு ஒருமுறை |
| | ஆரஞ்சு | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | ஆறு மாதத்திற்கு ஒரு முறை |
| | பச்சை | இரண்டு வருடத்திற்கு ஒரு முறை | — |
| 17 வகையான தொழிற்சாலைகள் | | மாதம் ஒருமுறை | மாதம் ஒருமுறை |

வாரியம், **01.04.2016** முதல் **31.05.2017** வரை **1,035** தொழிற்சாலைகளில் சுற்றுப்புற காற்று மாதிரி சோதனைகளையும் மற்றும் **27,207** வடிகால் மற்றும் செயல்முறைக்கழிவுநீர் மாதிரிகளும் எடுத்து பகுப்பாய்வு செய்யப்பட்டது.

## 8. காற்று தர கண்காணிப்பு மையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுப்புற காற்று தரத்தினை உடனுக்குடன் தெரிந்து கொள்ளும் நோக்கத்துடன் சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் காற்று தர கண்காணிப்பு மையத்தை அமைத்து இயக்கி வருகின்றது. இம்மையத்துடன் அதிக மாசுபடுத்தும் 17 வகையான தொழிற்சாலைகள், பெரிய சிகப்பு வகை தொழிற்சாலைகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் தொழிற்சாலைக் கழிவுகளை எரிப்பதற்கான எரிப்பான் ஆகியவை இணைக்கப்பட்டுள்ளன. மேற்படி தொழிற்சாலைகளிலிருந்து புகை போக்கி வழியாக வெளியேற்றப்படும் புகையின் தரம் மற்றும் சுற்றுப்புற காற்றின் தரம் இம்மையத்தின் மூலம் 24x7 மணி நேரமும் கண்காணிக்கப்படுகின்றது. புகைபோக்கி வழியாக வெளிவரும் புகையில் கலந்துள்ள துகள்கள், கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகிய காரணிகள் கண்காணிக்கப்படுகின்றன. சுற்றுப்புற காற்றில் கலந்துள்ள 2.5 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள நுண்துகள், 10 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள நுண்துகள்கள், கந்தக–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன் ஆக்ஸைடு ஆகியவை கண்காணிக்கப்படுகின்றன. தொழிற்சாலையிலிருந்து

வெளியேற்றப்படும் வாயுக்களின் தன்மை மற்றும் சுற்றுப்புறக் காற்றின் தன்மை குறிப்பிட்ட தர அளவினை மீறும் பொழுது, அத்தொழிற்சாலைக்கும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் மற்றும் உறுப்பினர் செயலருக்கும் உடனடியாக நிவாரண நடவடிக்கை எடுக்கும் பொருட்டு குறுந்தகவல் மற்றும் மின்னஞ்சல் தானியங்கி கணினி மூலம் அனுப்பப்படுகின்றன. மே **31, 2017** வரை **378** தொழிற்சாலைகள் புகை மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் மற்றும் **104** தொழிற்சாலைகள் சுற்றுப்புறக் காற்று மாசின் அளவை கண்காணிப்பதற்காகவும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

9. **நீர் தர கண்காணிப்பு மையம்**

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் கழிவு நீரின் தரம் மற்றும் நீர் நிலைகளின் தரத்தினை தொடர்ச்சியாக கண்காணிக்கும் நோக்கத்துடன் வாரியம், சென்னையில் உள்ள வாரிய தலைமை அலுவலகத்தில் நீர் தர கண்காணிப்பு மையத்தினை அமைத்துள்ளது. இம்மையம் ஜூலை **2015** முதல் செயல்பட்டுவருகின்றது. தொழிற்சாலைகளின் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்படும் கழிவுநீரின் தரத்தினை இணைய வழி முலம் **24**x**7** நேரமும் தொடர்ந்து இம்மையம் கண்காணிக்கின்றது. அதிக மாசு ஏற்படுத்தும்

17 வகை தொழிற்சாலைகள், பெரிய சிகப்பு வகை தொழிற்சாலைகள் மற்றும் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன, மே 31, 2017 வரை 143 தொழிற்சாலைகள் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. இவற்றில் 71 தொழிற்சாலைகள் அவற்றில் அமைக்கப்பட்டுள்ள பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்று நிலையத்தினை கண்காணிப்பதற்காகவும், 72 தொழிற்சாலைகள் அவற்றிலிருந்து வெளியேற்றப்படும் சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீர் தரத்தினை கண்காணிப்பதற்காகவும் இணைக்கப்பட்டுள்ளன. மேலும் தாமிரபரணி ஆற்றில் மூன்று இடங்களில் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு கருவிகளும் இம்மையத்துடன் இணைக்கப்பட்டுள்ளன. நீரின் அமிலத்தன்மை, மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள் மற்றும் நீரோட்டத்தின் அளவு ஆகியவை இம்மையத்தின் மூலம் கண்காணிக்கப்படுகின்றன.

## 10. **பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள்**

மாசு கட்டுப்பாடு வரையறைகளை அடைவதற்கு சிறு தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் சிரமத்தை கருத்தில் கொண்டு, மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம், சிறு தொழிற்சாலைகளுக்கு தொழில்நுட்பம் மற்றும்

நிதி உதவி செய்யும் திட்டத்தை அறிமுகம் செய்துள்ளது. இத்திட்டம் தொகுப்பாக அமைந்துள்ள சிறு தொழிற்சாலைகள், பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு நிதி உதவி பெறுவதற்கு வழிவகை செய்கின்றது. அதன்படி தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் தொகுப்பாக அமைந்திருக்கும் சிறு தொழிற்சாலைகளுக்கு பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை ஏற்படுத்துவதில் வாரியம் முக்கிய பங்காற்றி வருகிறது. பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கான திட்ட அறிக்கையின் பொதுக் கழிவுநீர் மீது உரிய தொழில் நுட்பத்தை உறுதி செய்வதற்காக தொழில் நுட்ப பரிசீலனை செய்வதற்கு வாரியம் உதவி புரிகிறது.

தமிழ்நாட்டில் மொத்தம் 44 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டு இயக்கப்பட்டன. இவற்றில் 13 நிலையங்கள் தோல் தொழிற்சாலைகளுக்காகவும், 30 நிலையங்கள் துணி சலவை மற்றும் சாயத் தொழிற்சாலைகளுக்காகவும், 1 நிலையம் உணவகங்கள் மற்றும் தங்கும் விடுதிகளுக்காகவும் அமைக்கப்பட்டன. தற்போது, தோல் தொழிற்சாலைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 13 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 11 பொதுக் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள் பூஜ்ஜிய கழிவுநீர் நிலைப்பாட்டை

அடையக்கூடிய அமைப்புகளை பொருத்தியுள்ளன. மீதம் உள்ள இரண்டு பொது சுத்திகரிப்பு நிலையங்களில், ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் முதல் மற்றும் இரண்டாம் நிலை சுத்திகரிப்பு அமைப்புகளை நிறுவியுள்ளது. சுத்திகரிக்கப்பட்ட கழிவுநீரினை, சுத்திகரிக்கப்பட்ட வடிகால் கழிவுநீருடன் கலந்து வாரியம் நிர்ணயித்த தர அளவினை எட்டுவதற்கு முடிவு செய்துள்ளது. மற்றொரு பொது சுத்திகரிப்பு நிலையத்தில் பூஜ்ஜிய நிலை கழிவுநீர் வெளியேற்றும் நிலையம் அமைக்கப்பட்டு வருகின்றது. சாய மற்றும் சலவை பட்டறைகளுக்காக அமைக்கப்பட்டுள்ள 30 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் 19 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பூஜ்ஜிய கழிவுநீர் நிலைப்பாட்டை அடையக் கூடிய அமைப்பினை பொருத்தியுள்ளன. மீதமுள்ள 11 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்கள், பூஜ்ஜியநிலை கழிவுநீர் வெளியேற்றத்துடன் கூடிய கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தினை அமைக்காத காரணத்தால் மாண்புமிகு உயர்நீதி மன்ற ஆணையின்படி மூடப்பட்டுள்ளன. கொடைக்கானலில், கொடை ஏரியை சுற்றியுள்ள தங்கும் மற்றும் உணவு விடுதிகளிலிருந்து வெளியேறும் வடிகால் கழிவுநீரை சேகரித்து சுத்திகரிப்பு செய்வதற்கு ஒரு பொது சுத்திகரிப்பு நிலையம் இயங்கி வருகின்றது.

## 11. தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை

தீங்கு விளைவிக்கும் மற்றும் இதர கழிவுகள் (மேலாண்மை மற்றும் எல்லை கடந்து கொண்டு செல்லுதல்) விதிகள், 2016 – ஐ மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சேமிப்பது, மறுசுழற்சி செய்வது, கொண்டு செல்வது மற்றும் அகற்றுவது பற்றிய வழிமுறைகள் இவ்விதிகளில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்விதிகளின்படி தீங்கு விளைவிக்கும் கழிவுகளை சுத்திகரிப்பு செய்து அகற்றுவது அக்கழிவுகளை உற்பத்தி செய்வோரின் பொறுப்பாகும். மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரத்தை வழங்கவேண்டும்.

மே 31, 2017 வரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், 3550 தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறிந்து இவ்விதிகளின் கீழ் அவற்றிற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது. தமிழகத்தில் ஆண்டு ஒன்றுக்கு 7.80 இலட்சம் டன் தீங்கு விளைவிக்கும் கழிவுகள் உற்பத்தியாகின்றன, இவற்றில் 2.90 இலட்சம் டன் கழிவுகள் நில நிரப்பு செய்யப்படுபவை, 3.70 இலட்சம் டன் கழிவுகள் மறு சுழற்சி

செய்யப்படுபவை மற்றும் 1.20 இலட்சம் டன் கழிவுகள் எரிப்பான் மூலமாக அழிக்கப்படுபவை. தீங்கு விளைவிக்கக் கூடிய இரசாயனப் பொருட்கள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களைச் சுற்றுப்புறச் சூழலுக்கு எந்தவித பாதிப்பும் இன்றி விஞ்ஞான முறையில் பாதுகாப்பாக கையாளுவதற்கு தகுந்த மேலாண்மை நடவடிக்கையினை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் எடுத்து வருகிறது. தீங்கு விளைவிக்கும் கழிவுகளை பாதுகாப்பாக சேகரித்து, சுத்திகரிப்பு செய்து அகற்றும் பொது வசதி, தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் உள்ளன.

| வ. எண். | பெயர் மற்றும் முகவரி | திறன் |
|---|---|---|
| 1 | தி/ள். தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட், சிப்காட் தொழில் வளாகம், கும்மிடிப்பூண்டி, திருவள்ளூர் மாவட்டம். | வருடம் ஒன்றுக்கு 1, 00, 000 டன் நிலம் நிரப்பு செய்தல், மணிக்கு ஒரு டன் எரித்தல், மொத்த நிலப்பரப்பு 26.9 ஏக்கர் |
| 2. | தி/ள் தமிழ்நாடு வேஸ்ட் மேனேஜ்மெண்ட் லிமிடெட் உண்டுஉருமிகிடாகுளம், திருச்சுழி வட்டம், விருதுநகர் மாவட்டம் | வருடம் ஒன்றுக்கு 1, 50, 000 டன் நிலம் நிரப்பு செய்தல், மொத்த நிலப்பரப்பு 80 ஏக்கர் |

துணி சாயமிடும் தொழிற்சாலைகளின் பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து உருவாகும் தீங்கு விளைவிக்கும் திடக்கழிவினை, சிமெண்ட் தொழிற்சாலைகளில் மூலப் பொருளாகவும் மற்றும் எரிபொருளாகவும் பயன்படுத்துவதில் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் முன்னோடி முயற்சிகளை எடுத்துள்ளது. 31.05.2017 வரை கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து பெறப்பட்ட சுமார் 59,174 டன் திடக்கழிவுகள், சிமெண்ட் தொழிற்சாலையில் மூலப் பொருள்களுடன் கலந்து சிமெண்ட் தயாரிக்க பயன்படுத்தப்பட்டுள்ளது. தீங்கு விளைவிக்கும் கழிவுப் பொருட்களை மறுசுழற்சி செய்வதற்காக வாரியம், இதுவரை இரும்பு அல்லாத உலோகங்கள், துத்தநாகம் மற்றும் தாமிர கழிவுகளை மறுசுழற்சி செய்வதற்காக 26 தொழிற்சாலைகளுக்கும், பயன்படுத்தப்பட்ட எண்ணெயை சுத்திகரிப்பதற்காக 14 தொழிற்சாலைகளுக்கும் மற்றும் கழிவு எண்ணெயை சுத்திகரிப்பதற்காக 12 தொழிற்சாலைகளுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 11.1 தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மைக்கு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்குதல்

தொழில் புரிவதற்கு சுலபமாக வழிவகை செய்யும் வண்ணம், தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான

அங்கீகாரம் வேண்டும் விண்ணப்பங்களை இணையதளம் மூலமாக பெற்று, பரிசீலனை செய்து அங்கீகாரத்தையும் இணையதளம் மூலமாகவே வழங்குவதற்கான மென்பொருளை வாரியம் 01.03.2016 அன்று அறிமுகம் செய்துள்ளது. அதன்படி தற்போது தொழிற்சாலைகள் தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கையாள்வதற்கான அங்கீகாரம் வேண்டி விண்ணப்பத்தினை இணையதளம் மூலம் சமர்ப்பிக்கின்றன. விண்ணப்பம் பரிசீலனை செய்யப்பட்டு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்கப்படுகின்றன. இவ்வசதியின் மூலம் தொழிற்சாலைகள் தங்களது விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை இணையதளம் மூலமாகவே அறிந்து கொள்ளலாம். மே 31, 2017 வரை 1733 தொழிற்சாலைகளிலிருந்து விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு, அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

## 12. மருத்துவக் கழிவு மேலாண்மை

மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகள் மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் கையாளுவோர் அனைவருக்கும் பொருந்தும். மருத்துவக்

கழிவுகளை பாதுகாப்பான முறையில் சேகரித்து சுத்திகரிப்பு செய்து அகற்றுவது, மருத்துவக் கழிவுகளை உற்பத்தி செய்வோர் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையத்தினை இயக்குவோர்களின் பொறுப்பாகும். மருத்துவக்கழிவு மேலாண்மை விதிகளை அனைத்து மருத்துவமனைகளும் சரிவர பின்பற்றுகின்றனவா என்பதை உறுதி செய்வது, மாநில அரசின் சுகாதாரத்துறையின் பொறுப்பாகும். மருத்துவமனைகள் மற்றும் பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுக்கு அங்கீகாரம் வழங்கி, அந்நிறுவனங்கள் விதிகளை சரிவர கடைபிடிக்கின்றனவா என்பதை கண்காணிக்கும் பொறுப்பு மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தை சார்ந்ததாகும்.

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் இவ்விதிகளின் கீழ் இதுவரை **3720** படுக்கை வசதி கொண்ட தனியார் மருத்துவமனைகளுக்கும், **368** படுக்கை வசதி கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கும் மற்றும் **573** படுக்கை வசதி அல்லாத மருத்துவமனைகளுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. அனைத்து மருத்துவமனைகளும் மருத்துவக்கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் விஞ்ஞான முறைப்படி அகற்றுதல் பொருட்டு, பொது

மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்களுடன் ஒப்பந்தம் செய்துள்ளன. தமிழ்நாட்டில் 11 பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் இயக்கத்தில் உள்ளன. இவற்றில் நாளொன்றுக்கு 43 டன் மருத்துவக்கழிவுகள் கையாளப்படுகின்றன. மேலும் 3 பொது மருத்துவக்கழிவு சுத்திகரிப்பு நிலையங்கள் திருவள்ளூர், கடலூர் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

## 12.1 மருத்துவ கழிவு மேலாண்மைக்கு இணையதளம் மூலம் அங்கீகாரம் வழங்குதல்

மருத்துவ கழிவுகளை கையாளுவதற்கான அங்கீகாரம் வேண்டும் விண்ணப்பங்களை இணையதளம் மூலமாக பெற்று, பரிசீலனை செய்து அங்கீகாரத்தையும் இணையதளம் மூலமாகவே வழங்குவதற்கான மென்பொருளை வாரியம் 01.03.2016 அன்று அறிமுகம் செய்துள்ளது. இதன் மூலம் மருத்துவமனைகள், மருத்துவ கழிவுகளை கையாளுவதற்கான அங்கீகாரம் வேண்டி விண்ணப்பத்தினை இணையதளம் மூலம் சமர்ப்பிக்கலாம். மேலும், அவ்விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை இணையதளம் மூலம் அறிந்து கொள்ளலாம். மே 31, 2017 வரை 875 மருத்துவமனைகளிலிருந்து

விண்ணப்பங்கள் இணையதளம் மூலம் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகாரம் வழங்கப்பட்டு வருகின்றன.

## 13. திடக்கழிவு மேலாண்மை

திடக்கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி திடக்கழிவுகளை சேகரித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல், மறுசுழற்சி செய்தல், சுத்திகரிப்பு செய்தல் மற்றும் அகற்றுதல் உள்ளாட்சி அமைப்புகளின் கடமையாகும். உள்ளாட்சி அமைப்புகளுக்கு திடக்கழிவுகளை கையாள்வதற்காக அங்கீகாரம் வழங்குதல், திடக்கழிவுகள் செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதலுக்காக ஏற்படுத்தப்பட்டுள்ள அமைப்புகள், சுற்றுச்சூழல் காரணிகள் மற்றும் விதிமுறைகளை சரிவர கடை பிடிக்கின்றனவா என்பதை கண்காணித்தல் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பாகும். இதுவரை வாரியம் 5 மாநகராட்சிகள், 50 நகராட்சிகள் மற்றும் 94 பேரூராட்சிகளுக்கு திடக் கழிவுகளை தரம்பிரித்து கையாள்வதற்கும் மற்றும் உரம் தயாரிக்கவும் அங்கீகாரங்களை வழங்கியுள்ளது.

## 14. பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை

பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை விதிகள், 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, பிளாஸ்டிக் கழிவுகளை தரம்பிரித்தல், சேகரித்தல், சேமித்தல், கொண்டு செல்லுதல், செயலாக்கம் செய்தல் மற்றும் அகற்றுதல் ஆகியவற்றுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். இவ்விதிகளின்படி, புதிய மற்றும் மறு சுழற்சி செய்யப்பட்ட பிளாஸ்டிக் கொண்டு உற்பத்தி செய்யப்படும் பிளாஸ்டிக் பைகள் 50 மைக்ரான் தடிமனுக்கு கீழ் இருக்கக்கூடாது. பிளாஸ்டிக் பைகள், மறுசுழற்சி முறையில் பிளாஸ்டிக் பைகள், பல அடுக்கு பேக்கேஜிங் போன்ற பொருட்கள் தயாரிப்போர் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகளை செயலாக்கம் அல்லது மறுசுழற்சி செய்வோர் மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் பதிவு சான்றிதழ் பெற வேண்டும். பதிவுச்சான்றிதழ் வழங்குதல், பிளாஸ்டிக் பொருட்கள் தயாரித்தல் மற்றும் பிளாஸ்டிக் கழிவுகள் அகற்றுதல் ஆகிய செயல்கள் விதிகளின்படி செயல்படுத்தப்படுகின்றதா என்பதை கண்காணிப்பது மாநில மாசு கட்டுப்பாடு வாரியத்தின் பொறுப்பாகும்.

இதுவரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் 471 பிளாஸ்டிக் பைகள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் மற்றும் 140 பிளாஸ்டிக் பொருட்கள் மறு சுழற்சி செய்யும் தொழிற்சாலைகளை கண்டறிந்துள்ளது. பிளாஸ்டிக் குறித்து பொது மக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் ஒவ்வொரு மாவட்ட ஆட்சியருக்கும் ஆண்டுதோறும் ரூ.50,000/– (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) 2015 ஆம் ஆண்டிலிருந்து வாரியம் வழங்கி வருகின்றது. மேற்படி விதிகளை திறம்பட செயல்படுத்த வேண்டும் என அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

## 15. **மின்னணுக் கழிவு மேலாண்மை**

மின்னணு கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, மின் மற்றும் மின்னணு சாதனங்களை தயாரிப்போர், அவர்கள் தயாரிக்கும் பொருட்களால் உண்டாகும் மின்னணு கழிவுகளை ஒருமுகப்படுத்தி சேகரிப்பு செய்வது அவர்களின் பொறுப்பாகும். மின் மற்றும் மின்னணு சாதனங்களை உற்பத்தி செய்வோர், பிரித்தெடுப்போர், மறுசுழற்சி செய்வோர், சீர் செய்வோர், மாநில

மாசு கட்டுப்பாடு வாரியத்திடம் அங்கீகாரம் பெற வேண்டும். மின்னணுக் கழிவுகள் சுற்றுச் சூழலுக்கு உகந்த முறையில் கையாளப்படுகின்றதா என்பதை மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணிக்க வேண்டும். இதுவரை தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மின்னணு கழிவு மேலாண்மை மற்றும் கையாளுதல் விதிகளின்படி, 35 தொழிற்சாலைகளுக்கு (16 – சேகரிப்பு மையங்கள், 14 – பிரித்தெடுப்போர், 5 – மறுசுழற்சி செய்வோர்) அங்கீகாரம் வழங்கியுள்ளது.

## 16. கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை

கட்டுமானம் மற்றும் இடிமான கழிவு மேலாண்மை விதிகள் 2016–ஐ மத்திய அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவ நிலை மாற்ற அமைச்சகம் அறிவிக்கை செய்துள்ளது. இவ்விதிகளின்படி, கட்டிட கட்டுமானம் மற்றும் இடிமானங்களிருந்து வெளியேற்றப்படும் கழிவுகளில் காங்கிரீட், மண் மற்றும் இதர பொருட்கள் என தரம் பிரித்து அவற்றினை உள்ளாட்சி அமைப்புகள் அறிவுறுத்தியபடி சேகரிப்பு செய்வது கட்டிடம் கட்டுவோரின் பொறுப்பாகும். மேற்படி சேகரிப்பு செய்த கழிவுப்பொருட்களை கொண்டு செல்லுதல் மற்றும் அகற்றுதல் உள்ளாட்சி அமைப்புகளின் பொறுப்பாகும். மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் கழிவுகளை மறுசுழற்சி செய்யும்

தொழிற்சாலைகளுக்கு அங்கீகாரம் வழங்கி, விதிகளை சரியான முறையில் அமல்படுத்துகின்றார்களா என்பதை கண்காணிக்க வேண்டும். மேற்படி விதிகளை செயலாக்கம் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு வாரியம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளையும் அறிவுறுத்தியுள்ளது.

## 17. **சுற்றுப்புற காற்றின் தர கண்காணிப்பு**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தினை செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், தமிழ்நாட்டில் 8 பெரு நகரங்களில், 28 இடங்களில் சுற்றுப்புற காற்றின் தரம் கண்காணிக்கப்பட்டு, வரையறுக்கப்பட்ட தர அளவுடன் ஒப்பிட்டு பார்க்கப்படுகின்றது. காற்றில் கலந்துள்ள 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன் ஆக்ஸைடு மற்றும் அமோனியா ஆகிய வாயுக் காரணிகள் கண்காணிக்கப்படுகின்றன. ஒவ்வொரு வாரமும் இரண்டு முறை 24 மணி நேரமும் (வாயு மாதிரிகள் 4 மணி நேரமும், காற்றில் கலந்துள்ள நுண் துகள்கள் மாதிரிகள் 8 மணி நேரமும்)

மாதிரிகள் சேகரிக்கப்படுகின்றன. கண்காணிப்பு செய்யப்படும் இடங்களின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| **வ. எண்** | **நகரம்** | **இடம்** | **நில பயன்பாடு** |
|---|---|---|---|
| 1 | சென்னை | கத்திவாக்கம் | தொழிற்சாலைப் பகுதி |
| | | மணலி | தொழிற்சாலைப்பகுதி |
| | | திருவொற்றியூர் | தொழிற்சாலைப்பகுதி |
| | | கீழ்பாக்கம் | வியாபார மற்றும் வாகனம் புழக்க பகுதி |
| | | தியாகராய நகர் | வியாபார மற்றும் வாகனம் புழக்க பகுதி |
| | | நுங்கம்பாக்கம் | வியாபார மற்றும் வாகனம் புழக்க பகுதி |
| | | அண்ணாநகர் | குடியிருப்புப்பகுதி |
| | | அடையார் | குடியிருப்புப்பகுதி |
| 2 | கோவை | மாவட்ட ஆட்சியர் அலுவலகம் | கலப்பு குடியிருப்பு பகுதி |
| | | பொன்னையாராஜபுரம் | குடியிருப்புப்பகுதி |
| | | சிட்கோ கட்டிடம் | தொழிற்சாலைப் பகுதி |

| | | | |
|---|---|---|---|
| 3 | மதுரை | நெடுஞ்சாலைத்துறை கட்டிடம் | குடியிருப்புப் பகுதி |
| | | சுசி கார்ஸ் ட்ரக்ஸ் (பி) லிட் | தொழிற்சாலைப் பகுதி |
| | | மதுரை மாநகராட்சி அலுவலகம் (தெற்கு) | கலப்பு குடியிருப்பு பகுதி |
| 4 | சேலம் | சௌடேஸ்வரி கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி |
| 5 | திருச்சி | காந்தி மார்க்கட் | வியாபாரப்பகுதி |
| | | மெயின்கார்டு கேட் | போக்குவரத்துப்பகுதி |
| | | பிஷப் ஹீபர் கல்லூரி | கலப்பு குடியிருப்பு பகுதி |
| | | பொன்மலை | குடியிருப்புப்பகுதி |
| | | மத்தியப்பேருந்து நிலையம் | போக்குவரத்துப் பகுதி |
| 6 | தூத்துக் குடி | இராஜா ஏஜென்சீஸ் | தொழிற்சாலைப் பகுதி |
| | | சிப்காட் | தொழிற்சாலைப் பகுதி |
| | | ஏ.வி.எம். கட்டிடம் | கலப்பு குடியிருப்பு பகுதி |

| | | | |
|---|---|---|---|
| 7 | மேட்டூர் | இராமன் நகர் | குடியிருப்பு பகுதி |
| | | சிட்கோ | தொழிற்சாலைப் பகுதி |
| 8 | கடலூர் | ஈச்சங்காடு கிராமம் | குடியிருப்பு பகுதி |
| | | இம்பீரியல் கல்லூரி | வியாபாரப்பகுதி |
| | | சிப்காட் | தொழிற்சாலைப் பகுதி |

**2016–2017** ஆண்டுக்கான கந்தக–டை–ஆக்ஸைடு மற்றும் நைட்ரஜன்–டை– ஆக்ஸைடுகளின் சராசரி அளவுகள், கண்காணிப்பு நடத்திய அனைத்து இடங்களிலும், பரிந்துரைக்கப்பட்ட காற்றுத்தர அளவீடுகளுக்குட்பட்டு இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. சுவாசிக்கும் போது உட்செல்லக்கூடிய, **10** மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள மிதக்கும் நுண்துகள்களின் அளவு சில இடங்களில் அதிகமாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. நுண்துகள்கள் அதிகமாக இருப்பதற்கு முக்கிய காரணம் வாகன போக்குவரத்தாகும்.

## 17.1 **தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்கள்**

தேசிய காற்று தர கண்காணிப்பு திட்டத்தோடு மட்டுமல்லாமல், வாரியம் **6** இடங்களில் தானியங்கி தொடர்

சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்து இயக்கி வருகின்றது. சென்னையில் 4 இடங்களில் அதாவது கோயம்பேடு, ராயபுரம், பெருங்குடி (சாய் நகர்), கொடுங்கையூர் ஆகிய இடங்களிலும், கும்மிடிப்பூண்டி சிப்காட் வளாகத்திலும் மற்றும் தூத்துக்குடி சிப்காட் வளாகத்திலும் அமைக்கப்பட்டு இயக்கத்தில் உள்ளன. இந்நிலையங்கள் மூலம், காற்றில் கலந்துள்ள 10 மைக்ரான் அளவுக்கு கீழ் உள்ள நுண்துகள்கள், 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண்துகள்கள், கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு மற்றும் பென்சீன் ஆகிய வாயு காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றன. மேலும் மாநிலத்தின் பெரு நகரங்கள் மற்றும் தொழிற்சாலைப் பகுதிகளில் சுற்றுப்புற காற்றின் தரத்தினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியம் 25 தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை ரூ. 45 கோடி செலவில் நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த நிலையங்கள் விரைவில் நிறுவப்பட்டு செயல்பட துவங்கும்.

## 17.2 நடமாடும் தொடர் காற்று தர கண்காணிப்பு நிலையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச் சூழல் காற்று தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ஒரு நடமாடும்

தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையத்தினை மார்ச் 2016–ல் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் காற்றில் கலந்துள்ள கந்தக–டை–ஆக்ஸைடு, நைட்ரஜன்–டை–ஆக்ஸைடு, அம்மோனியா, ஓசோன், கார்பன் மோனாக்ஸைடு, பென்சீன், டொலுவின், ஈத்தைல் பென்சீன், சைலீன், காற்றில் 10 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண் துகள்கள் மற்றும் 2.5 மைக்ரான் அளவிற்கு கீழ் உள்ள நுண் துகள்கள் ஆகியவற்றை அளவீடு செய்யலாம். மேலும், இந்நிலையத்தில் காற்றின் திசை, காற்றின் வேகம், சுற்றுப்புற வெப்ப நிலை, ஈரப்பதம், சூரிய கதிர்வீச்சு, மழை அளவு, காற்றின் அழுத்தம் போன்ற வானிலை சம்பந்தமான தகவல்களை அறியும் கருவிகளும் உள்ளன. இந்த நடமாடும் நிலையத்தின் மூலம் சென்னை மாநகரின் அதிக மாசு பகுதிகள் மற்றும் இதர பகுதிகளின் காற்றின் தரம் அளவீடு செய்யப்படுகிறது.

## 17.3 தேசிய சுற்றுப்புற ஒலி அளவு கண்காணிப்பு திட்டம்

சுற்றுப்புற ஒலியானது பல்வேறு வகையான செயல்களால் உண்டாக்கப்படுகிறது. அதாவது, தொழிற்சாலைகள், வாகனப் போக்குவரத்து, கட்டுமானப் பணிகள், ஜெனரேட்டர்கள், பட்டாசு வெடித்தல் போன்ற செயல்களினால் எற்படுகின்றது. மத்திய

அரசின் சுற்றுச் சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் சுற்றுச் சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன் கீழ் ஒலி மாசு (முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்பாடு) விதிகள் 2000–ஐ அறிவிக்கை செய்து ஜனவரி 2010–ல் அவ்விதிகளில் சில திருத்தங்களை செய்துள்ளது. இவ்விதிகளின்படி ஒலி மாசு குறித்து தர நிர்ணயம் செய்வதற்கும், தரத்தினை எட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கும் மற்றும் ஒலி மாசு குறித்து கொள்கை முடிவு எடுப்பதற்கும் ஒலி அளவின் புள்ளிவிவரம் தேவையான ஒன்றாகும்.

இதனை கருத்தில் கொண்டு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மத்திய மாசு கட்டுப்பாடு வாரியம் இணைந்து சென்னையில் 10 இடங்களில் சுற்றுப்புற ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் கருவிகளை பொருத்தி ஒலி அளவினை பதிவு செய்து வருகின்றது. அவ்விடங்கள்: 1. எழும்பூர், 2. தியாகராயநகர், 3. பெரம்பூர் 4. கிண்டி, 5. திருவல்லிக்கேணி, 6. பள்ளிக்கரணை, 7. வேளச்சேரி, 8. வண்ணாரப்பேட்டை, 9. அண்ணாநகர், 10. சௌக்கார்பேட்டை. பதிவு செய்யப்பட்ட புள்ளிவிவரப்படி சென்னை மாநகரின் ஒலி அளவு நிர்ணயிக்கப்பட்ட அளவினைவிட கூடுதலாக இருப்பது கண்டறியப்பட்டு நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

## 18. நீரின் தன்மை கண்காணிப்பு

தமிழ் நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், மத்திய மாசு கட்டுப்பாடு வாரியத்துடன் இணைந்து, புவி சுற்றுச்சூழல் கண்காணிப்பு திட்டம் மற்றும் இந்திய தேசிய நீர்வள ஆதாரங்கள் கண்காணிப்பு திட்டம் ஆகியவற்றை மாநிலத்தில் செயல்படுத்தி வருகின்றது. இத்திட்டங்களின் கீழ் மாநிலத்தில் உள்ள பெரிய நதிகள் மற்றும் குளங்களில் மொத்தம் 55 இடங்களில் மாதந்தோறும் நீர்மாதிரி எடுக்கப்பட்டு, நீரின் தன்மை கண்காணிக்கப்படுகிறது.

நீர் மாதிரி ஆய்வு முடிவுகளின் விவரம் பின்வருமாறு:-

| வரிசை எண் | நீர்நிலைகள் | கண்காணிப்பு நிலையங்களின் எண்ணிக்கை | நீர்நிலைகளின் தரம் |
|---|---|---|---|
| 1 | காவிரி ஆறு மற்றும் உப நதிகள் | 33 | குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது |
| 2 | தாமிரபரணி ஆறு | 12 | குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. |
| 3 | பாலாறு | 1 | குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி |

| | | | |
|---|---|---|---|
| | | | மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும் உகந்ததாக காணப்படுகின்றது. |
| 4 | வைகை ஆறு | 1 | குளிப்பதற்கும், முறையான சுத்திகரிப்பு மற்றும் கிருமிநாசினி மூலம் சுத்திகரித்து குடிப்பதற்கும், மீன்வளர்ப்பு மற்றும் வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது |
| 5 | ஏரிகள் | 8 | முறையான சுத்திகரிப்பும், அதை தொடர்ந்து கிருமிநாசினிமூலம் சுத்திகரிப்பும் செய்து குடிநீர் பயன்பாட்டிற்கும் மற்றும் மீன்வளர்ப்பு, வனவிலங்குகள் பெருக்க பயன்பாட்டிற்கும் உகந்ததாக காணப்படுகிறது. |

நீர் நிலைகள் மாசுபடுவதற்கு முக்கியமான காரணம் கரையோரங்களில் உள்ள நகரங்கள் மற்றும் கிராமங்களிலிருந்து கழிவுநீர், நீர்நிலைகளில் கலப்பதாகும். எனவே அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களை அமைக்கவேண்டும் என வாரியம் அறிவுறுத்தியுள்ளது.

## 18.1 சென்னை நீர் வழிகள் தர கண்காணிப்பு திட்டம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சென்னையில் உள்ள அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கூவம் மற்றம் ஓட்டேரி கால்வாய் ஆகியவற்றின் நீரின் தன்மையை ஏப்ரல் 2003 லிருந்து மாதந்தோறும் நீர் மாதிரி எடுத்து பகுப்பாய்வு செய்து வருகின்றது. நீர் மாதிரிகள் மேற்படி நீர் நிலைகளிலும், வடிகால் கழிவுநீர்/ தொழிற்சாலைக் கழிவுநீர் மேற்படி நீர் நிலைகளில் கலக்கும் இடங்களிலும் எடுக்கப்படுகின்றன. மொத்தம் 30 இடங்களில் மாதிரிகள் எடுக்கப்படுகின்றன. ஆய்வின் முடிவுகள் உள்நாட்டு நீர் நிலை தரம் IS 2296– 1982 பிரிவு ஏ –உடன் ஒப்பிட்டு பார்க்கும் போது பி.ஓ.டி, மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்கள் மற்றும் குளோரைடு ஆகிய காரணிகள் நிர்ணயிக்கப்பட்ட அளவைவிட அதிகமாக காணப்படுகிறது. இதற்கு காரணம் வடிகால் கழிவுநீர், நீர்

நிலைகளில் கலப்பதாகும். இந்த நீர் வழிகளில் மாசுக்களை குறைக்க தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளது.

## 18.2 தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்கள்

சாயத் தொழிற்சாலைகள் நிறைந்துள்ள திருப்பூர் மற்றும் ஈரோடு பகுதிகளில் நீர் நிலைகளின் தரத்தை தொடர்ந்து கண்காணிக்கும் பொருட்டு, வாரியம் காளிங்கராயன் வாய்க்கால் மற்றும் நொய்யல் ஆற்றில் தலா மூன்று இடங்களில் தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது. இது போன்று தாமிரபரணி ஆற்றிலும் மூன்று இடங்களில், தொடர் நீர் தர கண்காணிப்பு நிலையங்களை வாரியம் அமைத்துள்ளது இந்நிலையங்களின் மூலம் நீரின் அமில கார சமநிலை, மொத்தம் கரைந்துள்ள திடப் பொருட்கள், கரைந்துள்ள பிராண வாயு அளவு ஆகிய காரணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்படுகிறது. இதுபோன்று நாமக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களின் காவிரி ஆற்றில் 3 இடங்களில் கண்காணிப்பு நிலையங்கள் அமைக்க வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

## 19. சட்ட நடவடிக்கைகள்

### 19.1 மேல்முறையீட்டு ஆணையம்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு மேல் முறையீட்டு ஆணையம், ஓய்வு பெற்ற சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி தலைமையில் இரண்டு தொழில்நுட்ப வல்லுநர்களை கொண்டு தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாணையம் எண். 51, கங்காதீஸ்வரர் கோவில் தெரு, புரசைவாக்கம், சென்னை–86 என்ற விலாசத்தில் இயங்கி வருகிறது. நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974 –பிரிவு 28–ன் படியும், காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 பிரிவு 31–ன் படியும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணையினால் குறையுற்ற எந்தவொரு நபரும், ஆணை கிடைக்கப் பெற்ற 30 தினங்களுக்குள் இம்மேல்முறையீட்டு ஆணையத்திடம் மேல் முறையீடு விண்ணப்பம் செய்யலாம். மே 31, 2017 வரை 97 மேல்முறையீடுகள் பதிவு செய்யப்பட்டு, அவற்றில் 46 மேல்முறையீடுகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 51 மேல்முறையீடுகள் விசாரணையில் உள்ளன.

## 19.2 **தேசிய பசுமை தீர்ப்பாயம்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் வனபாதுகாப்புக்குரிய வழக்குகளை பயனுள்ளதாகவும், விரைவாகவும் முடித்து வைக்க தேசிய பசுமை தீர்ப்பாயம் சட்டம் 2010–ன் படி, 18.10.2010 அன்று புதுடில்லியில் தேசிய பசுமை தீர்ப்பாயம் அமைக்கப்பட்டது. தேசிய தீர்ப்பாயம் சட்டம் 2010–ன் படி, பிரிவு 28, 29 மற்றும் 33அ– நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1974, பிரிவு 13 நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) மேல் வரி சட்டம் 1977, பிரிவு 31 காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம் 1981 மற்றும் பிரிவு 5, சுற்றுச்சூழல் (பாதுகாப்பு) சட்டம் 1986–ன்படி மாநில மாசு கட்டுப்பாடு வாரியம் மற்றும் மேல்முறையீட்டு ஆணையத்தால் பிறப்பிக்கப்பட்ட ஆணை மற்றும் முடிவுகளினால் இடருற்ற நபர்கள் மேற்கூறிய ஆணைகள் கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் தேசிய பசுமை தீர்ப்பாயத்தில் மேல்முறையீடு செய்யலாம்.

சென்னையில், தென் மண்டலத்திற்கான தேசிய பசுமை தீர்ப்பாயத்தின் அமர்வு 2012ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. மேற்படி தேசிய பசுமை தீர்ப்பாயம் அரும்பாக்கம், சென்னை–106–ல் உள்ள தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்திற்கு சொந்தமான கட்டிடத்தில் இயங்கி

வருகின்றது. மே 31, 2017 வரை 709 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 390 வழக்குகள் தீர்வு செய்யப்பட்டுள்ளன. மீதமுள்ள 319 வழக்குகள் விசாரணையில் உள்ளன.

**19.3 மாசுபடுத்தும் தொழிற்சாலைகளுக்கு எதிரான நடவடிக்கை**

ஈரோடு, நாமக்கல், கரூர், திருப்பூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களில் உள்ள நீர் நிலைகளில் சட்ட விரோதமாக கழிவுகளை வெளியேற்றம் செய்யும் தொழிற்சாலைகள் பறக்கும் படை மூலம் ஆய்வு செய்யப்பட்டு, தொழிற்சாலைகளை அகற்றுவதற்கு மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. ஏப்ரல் 1, 2016 முதல் மே 31, 2017 வரை சட்ட விரோதமாக செயல்பட்ட 203 தொழிற்சாலைகள் அகற்றப்பட்டன. மேலும் மாநிலத்தில் நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1974 மற்றும் காற்று (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டம், 1981 –ஐ மீறி செயல்பட்டு வந்த 5896 தொழிற்சாலைகளுக்கு முகாந்திர கடிதமும் மற்றும் 222 தொழிற்சாலைகளுக்கு மூடுதல் உத்தரவும் வழங்கப்பட்டன.

## 20. **வாரியத்தின் இதர முக்கிய பணிகள்**

### 20.1 **பொது மக்கள் கேட்புரை**

சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கை **2006**–ன்படி சில குறிப்பிட்ட வகையான தொழிற்சாலைகள் அதன் அளவினை பொறுத்து இந்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திடமிருந்து சுற்றுச்சூழல் அனுமதியினை முன்னதாக பெறுவது அவசியமாகும். சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு அறிவிக்கையின்படி, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டத்தினை அந்தந்த மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடத்துகின்றது. கூட்டத்தில் பொது மக்களின் கருத்துக்கள் பதிவு செய்யப்பட்டு, அதன் அறிக்கை மத்திய அரசின் சுற்றுச்சூழல் அமைச்சகம் அல்லது மாநில சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீட்டு குழுமத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுகின்றது. ஏப்ரல் **2016** முதல் மே **2017** வரை வாரியம் **30** திட்டங்களுக்கு பொது மக்கள் கருத்து கேட்பு கூட்டங்களை நடத்தியுள்ளது.

## 20.2 தூய்மையான தொழில் நுட்பங்கள்

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், முழுமையான சுற்றுச்சூழல் பாதுகாப்பினை கருத்தில் கொண்டு, தொழிற்சாலைகள் தங்கள் உற்பத்தியிலிருந்து வெளியேறும் கழிவுகளை இறுதியில் சுத்திகரிப்பு செய்வதை தவிர்த்து, கழிவுகளே உற்பத்தியாகாமல் உள்ள தூய்மையான தொழில்நுட்ப முறைகளை கையாளவேண்டும் என அறிவுறுத்தி வருகின்றது. அண்மை காலங்களில் தமிழ்நாட்டில் பல்வேறு தொழிற்சாலைகள் தூய்மையான தொழில்நுட்ப செயல்முறைக்கு மாறியுள்ளன. உதாரணமாக

- கந்தக அமிலம் தயாரிக்கும் தொழிற்சாலைகள் இருமுறை மாற்றம் மற்றும் உட்கிரகிக்கும் தொழில்நுட்பத்தை செயல்படுத்துதல்.
- சயனைடு அற்ற முலாம் பூசுதல் மற்றும் சயனைடு உப்புக்கு பதிலாக வாயு கார்புரைசிங் முறையை வெப்பக்கடினப்படுத்துதலுக்கு பின்பற்றுதல்.
- எரிசோடா உற்பத்தியில் பாதரச கலத்திற்கு பதிலாக சவ்வூடு கலம் பயன்படுத்துதல்.

- சிமெண்ட் தொழிற்சாலைகளில் காற்று மாசினைக் குறைக்க ஈர செய்முறைக்கு பதிலாக உலர் செய்முறையினைப் பின்பற்றுதல்.
- பி.பி.சி சிமெண்ட் உற்பத்தியில் 25 முதல் 30 சதவிகிதம் வரை எரிசாம்பலை பயன்படுத்துதல்.
- செறிவூட்டப்பட்ட கரி தயாரிக்கும் தொழிற்சாலைகள், தங்கள் உற்பத்திக்கு தேவைப்படும் நீராவியினை அதற்கென அமைக்கப்பட்ட எரிபொருளை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுத்திவிட்டு, உபரி வெப்பத்தை கொண்டு இயங்கும் கொதிகலனை நிறுவியுள்ளன. இதனால் விறகு மற்றும் நிலக்கரி எரிபொருள் பயன்பாடு தவிர்க்கப்பட்டதுடன் பசுமை இல்ல வாயுக்கள் வெளியேறுவதும் தவிர்க்கப்பட்டுள்ளது.
- மரக்கூழ் மற்றும் காகித தொழிற்சாலைகள், டையாக்ஸின் உள்ளிட்ட ஆர்கேனோ–குளோரின் உருவாவதை குறைக்கும் வகையில் குளோரின் மூலக்கூறு இல்லாத சலவை முறையினை பின்பற்றுதல்.

## 20.3 மாபெரும் பசுமைப் போர்வை திட்டம்

தமிழ்நாட்டில், மாபெரும் பசுமைப் போர்வை திட்டத்தை செயல்படுத்துவதற்கு தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம்,

வனத்துறைக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. அதன்படி 64 லட்சம், 65 லட்சம், 66 லட்சம் மற்றும் 67 லட்சம் மரக்கன்றுகள் 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் நடப்பட்டன. இத்திட்டத்திற்காக இதுவரை வாரியம் ரூ.28.84 கோடி, ரூ.20 கோடி, ரூ.17.99 கோடி மற்றும் ரூ.16.832 கோடிகளை முறையே 2012, 2013, 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் வனத்துறைக்கு வழங்கியுள்ளது.

## 20.4 சுற்றுச்சூழல் விழிப்புணர்வு மற்றும் பொதுமக்கள் பங்கேற்பு

பல்வேறு மாசு கட்டுப்பாடு அளவீடுகளை, செம்மையான முறையில் அடைய, சுற்றுச்சூழல் பிரச்சாரம் ஒரு சிறந்த கருவியாக உள்ளது. அரசு இயந்திரம், சுற்றுச்சூழலுக்கு உகந்த விதிகள் மற்றும் கட்டுப்பாடுகளை செயல்படுத்தி வருகிறது. இதனை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கீழ்கண்ட பல்வேறு வகையான சுற்றுச்சூழல் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஒவ்வொரு ஆண்டும் நடத்தி வருகிறது.

- **போகி பண்டிகை:–** டயர்கள், டியூபுகள், பிளாஸ்டிக் பொருட்கள், துணிகள் போன்ற வீணான பொருட்களை எரிக்கக்கூடாது என்ற விழிப்புணர்வு பிரச்சாரங்கள்

வாரியத்தால் நடத்தப்படுகிறது. மேலும் சென்னை மாநகரில், 15 இடங்களில், போகி பண்டிகைக்கு முந்தைய நாட்களிலும், போகி பண்டிகை நாளிலும், தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் சுற்றுப்புறக் காற்று தரத்தினை கண்காணிக்கிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

- **விநாயகர் சதுர்த்தி:–** நீர்நிலைகளை பாதுகாக்கும் நோக்கத்துடன் விநாயகர் சிலைகள் தயாரிப்பதற்கு, பிளாஸ்டர் ஆப் பாரீஸ் மற்றும் பெயிண்ட்டுகளை பயன்படுத்த கூடாது என்று விழிப்புணர்வு பிரச்சாரம் ஒவ்வொரு மாவட்ட தலை நகரங்கள் மற்றும் நகரங்களில் நடத்தப்படுகிறது. மேலும், சிலைகள் கரைக்கப்படுவதற்கு முன்னரும் பின்பும், கண்டறியப்பட்ட நீர் நிலைகளின் நீரின் தரம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால் ஆண்டுதோறும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.
- **தீபாவளி பண்டிகை:–** 125 டெசிபெல் என்ற ஒலி அளவுக்கு மேல் ஒலி ஏற்படுத்தும் பட்டாசுகளை வெடிக்கக் கூடாது என்றும், மேலும் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை பட்டாசுகளை வெடிப்பதை தவிர்க்க வேண்டும் என்றும், விழிப்புணர்வு பிரச்சாரங்கள் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தினால்

ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகிறது. மேலும், சென்னை, திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, வேலூர், சேலம், ஓசூர், திருப்பூர், திண்டுக்கல் மற்றும் கடலூர் ஆகிய நகரங்களில் சுற்றுப்புற காற்றுத்தரம் மற்றும் ஒலி அளவினை, தீபாவளிக்கு முந்தைய நாளிலும், தீபாவளி நாளன்றும் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் கண்காணித்து வருகிறது. இதன் முடிவுகள் வாரிய இணைய தளத்தில் வெளியிடப்படுகிறது.

- **கார்த்திகை மகா தீபத்திருவிழா:–**

திருவண்ணாமலையில் நடைபெறும் கார்த்திகை மகா தீபத்திருவிழாவின் போது பிளாஸ்டிக் குறித்து பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் நிகழ்ச்சிகள் ஆண்டுதோறும் வாரியத்தின் மூலம் நடத்தப்படுகின்றன. அதன்படி, பிளாஸ்டிக் பைகளை தவிர்த்து அதற்கு மாற்றான துணிப்பை, காகிதப் பை, சணல் பை போன்றவற்றை பயன்படுத்துவதை ஊக்குவிக்கும் வண்ணம், கார்த்திகை மகா தீபத்திருவிழாவிற்கு துணிப்பை மற்றும் சணல் பையுடன் வரும் பொது மக்களுக்கு கூப்பன் வழங்கி, இறுதியில் குலுக்கல் மூலம்

வெற்றியாளர்கள் தேர்வுசெய்யப்படுகின்றனர். வெற்றிபெற்றவர்களுக்கு தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்களை பரிசாக வாரியம் அளிக்கின்றது. இந்நிகழ்ச்சி பொது மக்களிடையே பெரிய அளவில் விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது.

- **அரசு பொருட்காட்சிகள்:-** வாரியம், சென்னை தீவுத்திடலில் ஆண்டுதோறும் நடத்தப்படும் அரசு பொருட்காட்சியிலும் மற்றும் மாவட்ட தலைநகரங்களில் நடத்தப்படும் அரசு பொருட்காட்சிகளிலும் சிறப்பாக பங்கேற்று வருகின்றது. இப்பொருட்காட்சிகளில் வாரியம் அரங்கம் அமைத்து கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், காற்று மாசுகட்டுப்பாடு சாதனங்கள், திடக்கழிவு மேலாண்மை பற்றிய மாதிரி வடிவமைப்புகள், மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்பந்தமான தகவல்களை பொதுமக்களின் பார்வைக்கு வைக்கிறது. 2016–2017 ஆம் ஆண்டில் வாரியம் சென்னை தீவுத்திடல், திருநெல்வேலி, நாகர்கோவில், மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், சேலம், நாமக்கல், கடலூர் மற்றும் திருவண்ணாமலை ஆகிய இடங்களில் நடத்தப்பட்ட அரசு பொருட்காட்சிகளில் பங்குபெற்றது. இதில்

அமைக்கப்பட்டிருந்த வாரிய அரங்கினை அதிக அளவில் மாணவ மாணவியர்கள் மற்றும் பொதுமக்கள் பார்வையிட்டு பயனடைந்தனர். 2017–ம் ஆண்டு நடைபெற்ற அரசு பொருட்காட்சியில் வாரியத்தால் அமைக்கப்பட்ட அரங்கிற்கு 3–வது பரிசு வழங்கப்பட்டது.

- **உலக சுற்றுச்சூழல் தினம்:–** ஒவ்வொரு ஆண்டும் ஜுன் 5 ஆம் நாள் உலக சுற்றுச்சூழல்தினம் அனுசரிக்கப்படுகிறது. இந்நாளில் இயற்கை மற்றும் பூமியின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு சம்மந்தமாக பள்ளி மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வண்ணம் வாரியம் நிகழ்ச்சிகளை நடத்துகின்றது. இந்நாளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்து விளங்கும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் வழங்கப்படுகின்றன.

- **ஓசோன் தினம்:–** ஓசோன் படலத்தை காக்கும் நோக்கத்துடன் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் 16 ஆம் நாள், சர்வதேச அளவில் ஓசோன் தினம் அனுசரிக்கப்படுகிறது. இதன்படி செப்டம்பர்–2016–ல் வாரியம் மாவட்ட அளவில் தொழிற்சாலைகள் மற்றும்

கல்வி நிறுவனங்களுடன் இணைந்து ஓசோன் தின விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்தியது.

## 20.5 **சுற்றுச்சூழல் பயிற்சி நிலையம்**

தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம், சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தினை **1994–**ஆம் ஆண்டு ஏற்படுத்தியது. சுற்றுச்சூழல் பயிற்சி நிலையத்தின் முக்கிய குறிக்கோள் மாசு கட்டுப்பாடு வாரியத்தில் பணிபுரிவோர், தொழிற்சாலை பிரதிநிதிகள் மற்றும் அரசு சாரா அமைப்பின் பிரதிநிதிகள் ஆகியோருக்கு பயிற்சி அளித்தல் ஆகும். இந்த பயிற்சி நிலையம் **2016–17–**ஆம் ஆண்டில் (31.05.2017 வரை) **46** பயிற்சி வகுப்புகள் நடத்தி **843** நபர்களுக்கு பயிற்சியளித்துள்ளது. கீழ்க்கண்ட தலைப்புகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டன.

- மாசு கட்டுப்பாடு சட்டங்கள் மற்றும் விதிகள்
- ஒருங்கிணைந்த கடலோர மண்டல மேலாண்மை
- சுற்றுச்சூழல் பொருளாதாரம்
- காற்றின் தரம் மற்றும் சுகாதாரம்
- கழிவுநீர் சுத்திகரிப்பு
- தகவல் அறியும் உரிமைச்சட்டம்

- இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை
- தீங்கு விளைவிக்கும் கழிவுகளை கண்டறிதல் மற்றும் அளவிடுதல்
- திடக்கழிவு மேலாண்மை
- பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை
- வாகன புகை கண்காணிப்பு செய்தல்

## 20.6 **பசுமை விருதுகள்**

சுற்றுச்சூழல் பாதுகாப்பில் சிறந்த வழிமுறைகளை மேற்கொண்டு புகை வெளியேற்றம், பசுமை போர்வை ஏற்படுத்துதல், கழிவுநீர் வெளியேற்றம், திடக்கழிவுகள் மற்றும் தீங்கு விளைவிக்கும் கழிவுகளின் மேலாண்மை போன்றவற்றில் சிறந்த தரத்தினை அடையும் தொழிற்சாலைகளுக்கு பசுமை விருதுகள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்படுகின்றன. மேலும், இதுபோன்று மாவட்டத்தின் சுற்றுச்சூழலினை மேம்படுத்த சிறப்பாக செயல்படும் மாவட்ட ஆட்சியர்களுக்கும் பசுமை விருதுகள் வழங்கப்படுகின்றன. அதன்படி ஆண்டுதோறும் தொழிற்சாலைகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுக்கு பசுமை விருதுகள் வழங்கப்பட்டு வருகின்றது.

## 21 வாரியத்தின் சிறப்பான செயல்பாடுகள்

### காற்று மற்றும் நீர் மாசு கட்டுப்பாடு

சுற்றுப்புற காற்றின் தன்மையை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், வாரியம் ஆறு இடங்களில் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிப்பு நிலையங்களை மொத்தம் ரூபாய் **6.0** கோடி செலவில் ஏற்படுத்தியுள்ளது. மேலும் மாநிலத்தில் **25** இடங்களில் இத்தகைய தொடர் கண்காணிப்பு நிலையங்களை ரூ.**45** கோடி செலவில் அமைப்பதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

- சென்னை மாநகரின் காற்று மாசினை அளவீடு செய்வதற்காக வாரியம் ரூ. **1.25** கோடி செலவில், ஒரு நடமாடும் தொடர் சுற்றுப்புற காற்று தர கண்காணிக்கும் நிலையத்தினை நிறுவியுள்ளது.

- அதிக மாசுபடுத்தும் தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் வாயுக் கழிவுகள், சுற்றுப்புற காற்று மற்றும் கழிவுநீரின் தன்மையை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் ( 24 X 7) வாரிய தலைமை அலுவலகத்தில், காற்று தர கண்காணிப்பு மையம் மற்றும் நீர் தர கண்காணிப்பு மையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

- சென்னை மாநகரத்தில் சுற்றுச்சூழல் ஒலி அளவினை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம் வாரியம் சென்னையில் பத்து இடங்களில் ஒலி அளவு கண்காணிப்பு நிலையங்களை அமைத்துள்ளது.

- மாண்புமிகு சென்னை உயர் நீதிமன்ற உத்திரவின்படி, திருப்பூரில் மூடப்பட்ட 754 சாயப்பட்டறைகளை மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்படி 18 பொது கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் உறுப்பினர்களாக உள்ள 458 சாயப்பட்டறைகளும், தனியாக கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்துள்ள 95 சாயப்பட்டறைகளும் பூஜ்ய கழிவு நீர் வெளியேற்று நிலையம் (ZLD) அமைத்துள்ளதை தொடர்ந்து அவற்றை இயக்குவதற்கு வாரியம் அனுமதி அளித்துள்ளது. வாரியம் எடுத்த நடவடிக்கையின் காரணமாக நொய்யல் ஆற்றின் ஒரத்துபாளையம் அணை நீரில் மொத்தம் கரைந்துள்ள திடப்பொருட்களின் அளவு (TDS) குறைந்துள்ளது.

- நொய்யல் ஆறு, காளிங்கராயன் வாய்க்கால், தாமிரபரணி ஆறு ஆகிய நீர்நிலைகளின் தன்மையை தொடர்ந்து கண்காணிக்கும் வண்ணம், ஒவ்வொன்றிலும் தலா

மூன்று தொடர் நீர் தர கண்காணிப்பு கருவிகள் மொத்தம் ரூபாய் **0.65** கோடி செலவில் பொருத்தப்பட்டுள்ளது. இது போன்று காவிரி ஆற்றிலும் நிறுவுவதற்கு வாரியம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

- மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்ற அமைச்சகம் தமிழ்நாட்டில் மணலி, கடலூர் மற்றும் கோயம்புத்தூர் ஆகிய பகுதிகளை மாசுபடுத்தும் பகுதிகள் என அறிவித்து அங்கு புதிய தொழிற்சாலைகள் துவங்குவதற்கு தடை விதித்தது. பின்பு வாரியம் எடுத்த சீரிய நடவடிக்கையினால் தொழிற்சாலைகள் மாசுகட்டுப்பாடு சம்மந்தமான செயல்திட்டங்களை அமலாக்கம் செய்தன. அதனை தொடர்ந்து மேற்படி தடை விலக்கிக் கொள்ளப்பட்டது.

- கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையங்களில் தொட்டிகளை சுத்தப்படுத்தும்போது ஏற்படும் உயிர் இழப்புகளைத் தவிர்க்கும் வண்ணம், வாரியம் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையங்களை இயக்குபவர்களுக்கு பயிற்சி அளித்தது. இதில் **3000** க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயன் அடைந்தனர்.

**தீங்கு விளைவிக்கும் திடக்கழிவு மேலாண்மை**

- வாரியம் எடுத்த சீரிய நடவடிக்கையினால், சாயப்பட்டறை கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திலிருந்து வெளியேற்றப்பட்டு, நீண்ட நாளாக அகற்றப்படாமல் இருந்த சுமார் **59,174** டன் திடக்கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு அனுப்பப்பட்டு மூலப்பொருளாக பயன்படுத்தப்பட்டுள்ளது.

**ஆய்வகங்களை மேம்படுத்துதல்**

- சென்னை, கோயம்புத்தூர், சேலம், கடலூர் மற்றும் மதுரை ஆகிய இடங்களில் உள்ள வாரியத்தின் மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் ஆய்வகங்களுக்கு தேசிய அளவில் அங்கீகாரம் கிடைக்கும் வண்ணம், தேசிய அங்கீகார சான்றிதழ், மத்திய அரசின் தேசிய ஆய்வக அங்கீகார வாரியத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது.

- சென்னை, சேலம் மற்றும் கடலூர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள மேம்படுத்தப்பட்ட ஆய்வகங்களுக்கு தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு மேலாண்மை–**18001** சான்றிதழ் பெறப்பட்டுள்ளது.

- தற்பொழுது காஞ்சிபுரம் மாவட்டம் மறைமலைநகர் மற்றும் ஈரோடு மாவட்டம் பெருந்துறையில் மாவட்ட சுற்றுச்சூழல் ஆய்வகம் ஏற்படுத்தப்பட்டது.
- வாரிய ஆய்வகங்களின் ஆய்வு திறனை மேம்படுத்தும் வகையில் மொத்தம் ரூ. 4.91 கோடி செலவில், நீர் மாதிரி மற்றும் காற்று மாதிரி ஆய்வு செய்யும் உபகரணங்கள் புதிதாக வழங்கப்பட்டுள்ளன.

**உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல்**

- 12 மாவட்ட அலுவலகங்களுக்கு புதிய கட்டிடங்கள், மொத்தம் ரூ. 21.23 கோடி செலவில் கட்டப்பட்டு திறக்கப்பட்டுள்ளது. மேலும் 2 புதிய கட்டிடங்களின் கட்டுமானப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன (பெருந்துறை மற்றும் வாணியம்பாடி).
- வாரியப் பணிகளை துரிதமாக செய்து முடிக்கும் வண்ணம் வாரியத்தின் அனைத்து பொறியாளர்கள் மற்றும் மூத்த அலுவலர்களுக்கு மொத்தம் ரூ. 1.41 கோடி செலவில் 216 மடிக்கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டது.

- தொழிற்சாலைகளை முனைப்புடன் கண்காணித்து, சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்கத்துடன் இணை தலைமை சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் **6** மண்டல அலுவலகங்கள் சென்னை, வேலூர், கோயம்புத்தூர், திருச்சி, மதுரை மற்றும் சேலம் ஆகிய இடங்களிலும், மாவட்ட சுற்றுச்சூழல் பொறியாளர் தலைமையில் **8** மாவட்ட அலுவலகங்கள் கோயம்புத்தூர் வடக்கு, திருப்பூர் தெற்கு, அரியலூர், சிவகங்கை, ராமநாதபுரம், தர்மபுரி, தேனி மற்றும் ஊட்டி ஆகிய இடங்களில் புதிதாக ஏற்படுத்தப்பட்டன.

**வாரிய பணிகளை கணினி மயமாக்குதல்**

- இணைய வழி இசைவாணை மேலாண்மை மற்றும் கண்காணிப்பு முறைமை (Online Consent Management and Monitoring System)–ஐ வாரியம் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம் நீர் மற்றும் காற்று சட்டங்களின் கீழ் வாரிய இசைவாணை வேண்டும் விண்ணப்பங்கள் மற்றும் அதற்கான கட்டணங்கள் இணைய வழி மூலமாகப் பெறப்பட்டு, பரிசீலனை செய்யப்பட்டு இணைய வழி மூலமாகவே இசைவாணைகள் வழங்கப்படுகின்றன.

- மார்ச் **2016** –ல் வாரியம் இணைய வழி மூலம் புகார்கள் பதிவு செய்யும் வசதியினை ஏற்படுத்தி செயல்படுத்தி வருகின்றது. இதன் மூலம் பொது மக்களிடமிருந்து மாசு சம்பந்தமான புகார்கள் இணையவழி மூலம் பெறப்பட்டு தீர்வு காணப்படுகிறது.
- தீங்கு விளைவிக்கும் கழிவுகள் மற்றும் மருத்துவக் கழிவுகளை கையாளுவதற்கான வாரிய அங்கீகாரம் பெறுவதற்கான விண்ணப்பங்கள் இணையவழி மூலம் பெற்று, பரிசீலனை செய்து, இணையவழி மூலமாகவே அங்கீகாரம் வழங்குவதற்கான மென்பொருளை வாரியம் மார்ச் **2016**–ல் அறிமுகம் செய்து செயல்படுத்தி வருகின்றது.
- தமிழ்நாடு மாசுகட்டுபாடு வாரியம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு இடையே இணைய தளம் வழியாக தகவல்கள் பரிமாறுவதற்காக தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் **1.05.2017** முதல் இ–நோட்டிங் என்ற சேவையினை தொடங்கியுள்ளது.

**K.C. கருப்பணன்**
**அமைச்சர் – சுற்றுச்சூழல்**